தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களம் - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமான பெறுவனவு

திணைக்களத்திற்குரிய வருமானங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதிக்கூறறுக்களளுடன் சமர்ப்பிக்கப்ட்ட 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் (ஏசீஏ - I (i)) பிரகாரம் அறிக்கையிடப்படும் ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் ரூபா. 241,155,870 தொகை ஆன போதும், கூட்டுத்தாபன பிரிவின் சமர்ப்பிக்கப்ட்ட அறிக்கையின் பிரகாரம் அது ரூபா. 242,326,345 ஆனது. அதன் பிரகாரம் ரூபா. 1,170,475 ஆன வித்தியாசம் காணபிக்கப்ட்டது.	முன்னைய ஆண்டுகளில் நிலுவையாக குறிப்பிடப்பட வேண்டிய ரூபா. 1,170,475 தொகை 2024 ஆண்டின் நிலுவை வருமானமாக குறிப்பிடுவது இந்த வித்தியாசத்திற்கு காரணமாக உள்ளதுடன், கிடைக்கும் சில காசோலைக்காக பட்டியல் இலக்கம் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் இந்த விதத்தில் உரிய ஆண்டை சரியாக இனங்காணுவதற்கு கடினமான சந்தர்ப்பங்கள் ஏற்படும். பின்னர் அவ்வற்றை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமானம் தொடர்பான தகவலகள் சரியாக காட்டப்பட வேண்டும்.
(ii)	நிதிக்கூறறுக்களளுடன் சமர்ப்பிக்கப்ட்ட 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் (ஏசீஏ - I (i)) கடந்த ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் மீதி ரூபா. 29,565,343 ஆக காட்டப்பட்ட போதும், கூட்டுத்தாபன பிரிவின் சமர்ப்பிக்கப்ட்ட	சில சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து குறித்த வழக்கு நடவடிக்கைக்காக பட்டியல் அனுப்பி இருந்த போதும், உரிய வழக்கு தியதியில் சட்ட கடமைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத	நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமானம் தொடர்பான தகவலகள் சரியாக காட்டப்பட வேண்டும்.

	தகவலடகளின் பிரகாரம் அது ரூபா. 29,775,118 ஆனது. அதன் பிரகாரம் ரூபா. 209,775 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	சந்தர்ப்பங்களில் ஆகும். பட்டியலுக்காக திருத்தங்கள் சமர்ப்பித்தமை உரிய வித்தியாசத்துக்கு காரணமாகியுள்ளது.	
(iii)	2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் (ஏசீஏ - I (i)) கடந்த ஆண்டிற்கு முன்னைய ஆண்டு வரை நிலுவை வருமானம் அறவிடலாக ரூபா. 19,659,253 தொகை காட்டப்பட்டிருந்த போதும், கூட்டுத்தாபன பிரிவின் கிடைத்த தகவல்களின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா. 23,659,252 ஆனதால் ரூபா. 3,999,999 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	இந்த வித்தியாசத்துக்கு காரணம் அனுப்பப்படும் பட்டியல்களிக்குரியதாக கிடைக்கும் காசோலைகள் திருத்தங்களுடன் பெறுவது மற்றும் திணைக்களத்தினால் அனுப்பப்படும் பட்டியல் இலக்கம், குறித்த நிறுவனத்தில் இருந்து கிடைக்கும் காசோலையினால் உரிய ஆண்டை வெளிப்படுத்திக் கொள்வதற்கு முடியாமலிருந்தமை.	நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமானம் தொடர்பான தகவலகள் சரியாக காட்டப்பட வேண்டும்.
(iv)	2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் (ஏசீஏ - I (i)) கடந்த ஆண்டிற்கு முன்னைய ஆண்டு வரை நிலுவை வருமானம் ஆண்டு இறுதி ரூபா 213,420,885 ஆன போதும், கூட்டுத்தாபன பிரிவின் சமர்ப்பிக்கப்ட்ட தகவல்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா. 212,283,550 ஆனதால் ரூபா. 1,137,335 வித்தியாசம் காண்பிக்கப்பட்டது.	கூட்டுத்தாபன பிரிவின் மேற்கொள்ளப்படும் சேவைகளுக்காக பட்டியல் தயாரித்தல் மற்றும் சேகரிக்கும் வருமானம், முறையாக கணினி தரவு முறைமை ஊடாக மேற்கொள்ளப்படாததனால், அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் நாளாதுவரையாக்கும் தாமதம் நிலவியதன் காரணமாக வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளதுடன், விரைவில் ஒழுங்கான கணனி தரவு முறைமையொன்றை கூட்டுத்தாபன பிரிவிக்காக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பது என தயவுடன் அறிவிக்கிறேன	நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமானம் தொடர்பான தகவலகள் சரியாக காட்டப்பட வேண்டும்.
(v)	2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானம் தொடர்பான கூற்றின் பிரகாரம் ஆண்டு இறுதி நிலுவை வருமானம் ரூபா. 484,142,098 காட்டப்பட்டிருந்த போதும், கூட்டுத்தாபன பிரிவின் கிடைத்த தகவல்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா. 484,633,913 ஆனதால் ரூபா. 491,815 வித்தியாசம் காண்பிக்கப்பட்டது.	கூட்டுத்தாபன பிரிவின் மேற்கொள்ளப்படும் சேவைகளுக்காக பட்டியல் தயாரித்தல் மற்றும் சேகரிக்கும் வருமானம், முறையாக கணினி தரவு முறைமை ஊடாக மேற்கொள்ளப்படாததனால், அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் நாளாதுவரையாக்கும் தாமதம் நிலவியதன் காரணமாக வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளதுடன், விரைவில் ஒழுங்கான கணனி தரவு	நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமானம் தொடர்பான தகவலகள் சரியாக காட்டப்பட வேண்டும்.

		முறைமையொன்றை கூட்டுத்தாபன பிரிவிக்காக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பது என தயவுடன் அறிவிக்கிறேன

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் 272(3) பிரகாரம் அனைத்து கொடுப்பனவு வவுசர்கள் அதற்குறிய மாதம் இறுதியிலிருந்து ஆறு வாரங்களிற்கு மேற்படாத காலம் விஞ்சாது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்க மாதாந்தம் அனுப்ப வெண்டிய பொதும், ரூபா. 967,229,350 ஆன பெறுமதியுடன்கூடிய 2024 ஆண்டிற்குரிய 381 வவுசர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.	கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத வவுசர்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பது என அறவிக்கிறேன்.	குாணாமல் போயிருந்த வவுசர்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 272(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், 1993 ஜுலை 21 ஆம் திகதிய இலக்கம் 320 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை கடிதம் பிரகாரம் நிதிப்பிரமாணம் 119 பிரகாரம் நிதிசார் பெறமதியை உரிய உத்தியோகத்தர்களுக்கு மிகை அறவீடு செய்து அறவிட வேண்டும். தாபன விதிக் கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவுகள் பிரகாரம் ஒழுக்காற்று அதிகாரியினால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளதுஎனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரைகள்	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
(i)	1.6.2 (அ)(iv)	ஏசீஏ – I (i) நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் அறிக்கையிடப்படும் ஆண்டிற்குரியதான நிலுவை தொகை மற்றும் 2023 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வருமான பதிவேட்டின் பிரகாரம் அந்த பெறுமதிக்கிடையிலான வித்தியாசத்தை சரிசெய்திருக்கவில்லை.	1.6.1 (அ)(i)
(ii)	1.6.2 (அ)(v)	2023 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வருமான மீதி மற்றும் நிலுவை வருமான பதிவேட்டின் பிரகாரம் அந்த மீதிகளிற்கிடையே காணப்பட்ட வித்தியாசத்தை சரிசெய்திருக்கவில்லை.	1.6.1 (அ)(v)
(iii)	1.6.2 (அ)(vi)	ஏசீஏ – (i) கூற்றில் கடந்த ஆண்டிற்கு முன்னைய ஆண்டளவில் நிலுவை தொகை அறவிடுதல் மற்றும் 2023 வருமானம் அறவிட்ட அட்டவணை பிரகாரம் அந்த மீதிகளிற்கிடையே காணப்பட்ட வித்தியாசத்தை சரிசெய்திருக்கவில்லை.	1.6.1 (அ)(iii)

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	நிதிப்பரமாணம் 128(2)(உ) பிரகாரம் அரச வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் அரசிற்கு கிடைக்க வேண்டியதாக இருக்கும் நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவது தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் பயன்படுத்த வேண்டிய போதும், 2024 திசெம்பர் 31 திகதி வரை திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய நிலுவை வருமானமாக ரூபா. 484,633,913 ஆன மீதியொன்று காண்பிக்கப்பட்டதுடன், அந்த நிலுவை மீதினுள் 10 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா. 114,639,151 உம், 7 - 9 ஆண்டுகள் வரை ரூபா. 28,840,247 உம், 4 – 6	நிலவை வருமானம் ரூபா 3.0 மில்லியனுக்கு கூடுதலாக காணப்படும் நிறுவனங்களில் தலைவர்களை அழைப்பித்து செலுத்த வேண்டிய நிலுவை தொகை விரைவுபடுத்துமாறு அறிவிக்கப்ட்டுள்ளது. அவ்வாறே நிறுவனங்களிற்கு செலுத்துமாறு அவ்வப்போது எழுத்துமூல நினவூட்டல் மற்றும் அனைத்து நிறுவனங்களில் உரிய உத்தியோகத்தர்களிற்கு தொலைபேசி ஊடாக கடன் மீதியை தீர்க்கும் தேவைபாட்டை கடுமையாக வழியுறுத்தப்பட்டமை, கணக்காண்டு முடிவடைந்து முதலாம் காலாண்டினுள் அனைத்து நிலுவை கடன் ரூபா. 10,000 அதிக அனைத்து நிறுவனங்களுக்கும் அட்டவணையுடன் கூடிய கடன் மீதிகளை விரைவில்	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ஆண்டுகளிற்கிடையில், ரூபா. 42,072,857 உம், 01 – 03 ஆண்டுகள் வரை ரூபா. 56,755,313 உம், 1 ஆண்டுக்கு குறைந்த மீதி ரூபா. 242,326,345 உம் உள்ளடங்கப்பட்டிருந்தது.	தீர்க்குமாறு அறிவிக்கப்பட்டமை மற்றும் நீதிமன்ற அமைச்சின் செயலாளரினாலகடன் மீதி தொடர்பாக வேறாக கழந்துரையாடல் நடாத்தி இந்த கடன் மீதியை செலுத்துவதற்காக உரிய நிறுவன பொறுப்பான அமைச்சு செயலாளர்களை அறிவூட்டப்பட்டிருந்மமை.	
(ஆ)	நிதிப்பிரமாணம் 175(2) பிரகாரம் நிலுவை தொகை தொடர்பாக வஷேட கவனம் செலுத்த வேண்டியதுடன், தாமதமின்றி சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் சட்ட ரீதியாக அல்லது நிலுவை தொகை அறவிட முடியாதுபொனால் நீண்டகால நிலுவை தொகை திறைசேரியின் இணக்கபாட்டின் மீது பதிவழித்தல் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய பொதும், 2005 முதல் 2014 ஆண்டு வரை நீண்டகாலமாக 164 நிறுவனங்களின் ரூபா. 115,121,711 தொகையான வருமானமொன்று அறவிட இருந்தது.	கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொண்டேன்.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	திணைக்களத்தினால் 2024 ஆண்டினுள் 2003 முதல் 2023 வரையான ஆண்டுகளுக்குரியதாக ரூபா. 82,506,552 ஆன நிலுவை வருமானத்தை சேகரித்துள்ளதுடன், அது 2024 திசெம்பர் 31 திகதி வரை அறவிடுவதற்கு இருந்த வருமானமான ரூபா. 486,007,198 தொகைக்கு ஒப்பாக 33.85 குறைந்த சதவீதமானது.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென அறிவிக்கிறேன்.	நிவுவை வருமானத்தை விரைவில் சேகரித்துக்கொள்ள வேண்டும்.
(ஈ)	2024 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வருமான மீதிகள் தொடர்பாக கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட மாதிரி மீதி உறுதிபாடுகள் பிரகாரம், உரிய நிறுவனங்களில் இருந்து பெறவேண்டிய மீதிகள் மற்றும் நிறுவனத்திற்கு அறவிட வேண்டிய மீதிகளுக்கு	உரிய நிறுவனங்களுக்கு ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டியலுக்காக பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது என தயவுடன் அறிவிக்கிறேன்.	பெற வேண்டிய நிலுவை வருமான மீதிகள் மற்றும் உரிய நிறுவனங்களில் காணப்படும் மீதிகள் ஒவ்வொன்றை செம்மையாக்க வேண்டியதுடன்

	இடையில், ரூபா. 28,585,300 ஆன வித்தியாசம் நிலவியது.		சரியாக அருத்தலும் வேண்டும்.
(உ)	2015 ஜூலை 20 திகதிய 01/2015 இலக்கம் கொண்ட அரச நிதி கொள்கைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச வருமானம் மதிப்பிடல், சேகரித்தல், மேற்பார்வை மற்றும் அறிக்கையிடல் தொடர்பான வழிகாட்டியின் 04 ஆம் பந்தி பிரகாரம் வருமானம் நிர்வாகம் மற்றும் கணக்கிட்டு மேம்பாடுக்காகவும், மேற்பார்வை நடவடிக்கை மற்றும் கொள்கைகள் பகுப்பாய்வுக்காகவும் ஒழுங்கானவாறு அறிக்கை பேணுதல் அத்தியாவசியமாவதுடன், அதன் குறிப்பிடப்பட்டுள்ள (அ), (ஆ) மற்றும் (உ) பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களம் இயலாது இருந்தது.	எதிர்காலத்தில் கணக்காய்வு அவதானிப்பின்படி நடவடிக்கை எடுக்க குறித்துக்கொண்டேன்.	சுற்றறிக்கை பிரகாரம் வருமானங்கள் நிர்வாகம் மற்றும் கணக்கீடு தொடர்பான மிக கவனத்துடன்டன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	போதுமானவாறு வருடாந்த மதிப்பீட்டின் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டக்கொள்ளாமைனால் மீண்டெழும் 09 செலவின விடயங்கள் மற்றும் மூலதன 02 செலவின விடயங்களிற்காக நிதிஏற்பாடு ரூபா. 142,000,000 தொகையிலிருந்து ரூபா. 28,129,098 எஞ்சியிருந்ததுடன், அந்த சேமிப்பு 09 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான விச்சளவை கொண்டிருந்தது.	பாதீட்டு சுற்றறிக்கை 01/2024 பிரகாரம் செலவினம் கட்டுப்படுத்தமை மற்றும் கொள்வனவு மட்டப்படுத்தமைனால் உரிய செலவின விடயங்களில் நிதிஏற்பாடு சேமிப்பு இடம் பெற்றதுடன், மீண்டெழும் 04 செலவின விடயங்களிற்காக பொறுப்புகளிற்கு உட்பட்டிருந்தது.	நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	திட்டமிடப்பட்ட வெளிநாட்டு சட்ட கருத்தரங்கிற்காக பங்குபற்றலை இரத்து செய்ததன் மீது ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் ரூபா. 1,640,420 தொகை அதாவது, 12 சதவீதம் எஞ்சி இருந்தது. குறித்த கருத்தரங்கிற்காக பங்குபற்றலை இரத்து செய்வதற்கு காரணம் உள்ளடக்கப்பட்ட உரிய எழுத்து மூல சான்றுகளை	உரிய எழுத்து மூல சான்றுகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கிறேன்.	எழுத்து மூல சான்றுகளை கணக்காய்வுக்கு தாமதமின்றி சமர்ப்பிக்க வேண்டும்.

	கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.		
(இ)	போதுமானவாறு வருடாந்த மதிப்பீட்டினால் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமைனால் முதல் நிதிஏற்பாட்டின் 07-143 சதவீததிடையில், அளவொன்றை நிதிப்பிரமாணம் 66 மூலம் நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது.	மதிப்பீடு தயாரிக்கும் போது எதிர்ப்பார்க்கப்பட்ட செலவினங்களிற்கு மேலதிகமாக அவசர தேவை பாடுகளின் மீது ஏற்படும் செலவினம் தீர்ப்பதற்காக குறைவான நிதிஏற்பாடுடைய செலவின விடயங்களுக்கு நிதி பிரமாணம் 66 இன் கீழ் நிதிஏற்பாடு மாற்றப்பட்டதாக அறிவிக்கிறேன். அதன் எதிர்பார்க்கப்படுவது தொடர்ந்தும் சேவையை நடாத்தி செல்வதாகும்.	நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	2024 சனவரி 10 ஆம் திகதி இலக்கம் 01/2024 கொண்ட பாதீட்டு சுற்றறிக்கையின் 03 பந்தியின் பிரகாரம் மின்சாரம், நீர், தொலைபேசி சேவைகளுக்கான செலவினம் குறைத்துக் கொள்வதற்காக உரியவாறு செலவினம் கட்டுப்பாட்டு முறையை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், ரூபா. 4,000,000 நிதிஏற்பாடு நிதிப்பிரமாணம் 66 மூலம் மின்சாரம் மற்றும் நீர்களுக்காக மாற்றப்பட்டிருந்தது.	மின்சாரம் மற்றும் நீர் கட்டணம் அதிகரித்தமை காரணத்தால் ஒதுக்கப்பட்டு இருந்த நிதி ஏற்பாடு போதாமை போனதால் நிதிப்பிரமாணம் 66 மாற்றங்களின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுக்கொண்டது.	நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	2024 சனவரி 10 ஆம் திகதிய இலக்கம் 01/2024 கொண்ட தேசிய பதீட்டு சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் அலுவலக தேவைப்பாடுகளை கொள்வனம் செய்யும் போது கடும் கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், வருடாந்த உண்மையான தேவைபாட்டின் மீது மாத்திரம் பெறுகைகள் செய்யப்பட வேண்டிய போதும், ரூபா. 10,000,000 ஆன நிதி ஏற்பாடு நதிப்பரமாணம் 66 மூலம் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மாற்றப்பட்டிருந்ததுடன், இது மதிப்பீட்டு நிதிஏற்பாட்டிலிருந்து 143 சதவீத அதிகரிப்பாகும்.	புதிய கட்டிடத்தின் செயற்பாட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன் ஏற்பட்ட கணனி தேவைப்பாடுகளை நிவரத்தி செய்து கொள்ள கணனி கொள்வனவிற்கு ஒதுக்கியிருந்த நிதிஏற்பாடு போதாத காரணத்தால் தொடர்ந்து சேவை நடவடிக்கைகளை பேணிச் செல்லும் தேவைப்பாட்டின் மீது நிதிப்பிரமாணம் பிரமானம் 66 மூலம் நிதி ஏற்பாட்டை பரிமாற்றி குறித்த தேவைபாடு நிறைவு செய்து கொள்ளப்பட்டது.	நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழகாட்டி இலக்கம் 06/2024 சுற்றறிக்கை 3.3 பந்தி பிரகாரம் அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படும் கடப்பாடு மற்றும் பொறுப்புக்களை 2024 திசெம்பர் 31 திகதிக்கு கடப்பாட்டு இலக்கம் பிரகாரம் வெளிப்படுத்த வேண்டிய போதும், ரூபா. 610,039 பெறுமதியான 2024 ஆண்டிற்குரிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்துள்ள கடப்பாடு மற்றும் பொறுப்புக்ககள் பற்றிய கூற்றில் மற்றம் SA 92 திறைசேரி அச்சுப்பிரதியில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். உரிய கால எல்லையினுள் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்டாத காரணத்தால் இவ்வாறு இடம்பெற்றதாக தயவடன் அறிவிக்கிறேன்.	தொடர்புடையின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் பொறுப்புக்களை வெளிப்படுத்த வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா.	இணங்காமை		
(அ)	இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIV	10,669	வழங்கியுள்ள காலஎல்லையினுள் சமர்பிக்கப்படாத பிரயாண செலவு விண்ணப்படிவமொன்றிற்கு நிதிப்பிரமாணம் 115 கீழ் கழித்து பணம் செலுத்த வேண்டிய	எதிர்காலத்தில் இவ்வாறான குறைவாடுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதாக குறித்துக் கொள்வதுடன்,	தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	அத்தியாயத்தின் 28.5 மற்றும் 28.6 உப பிரிவுகள்		போதும், 12 சந்தர்ப்பங்களில் தாமதக் கட்டணம் அறவிடாது மொத்த பிரயாண கட்டணங்களும் செலுத்தப்பட்டிருந்தது.	அறவிடப்படாத தாமத கட்டணத்தை மீண்டும் அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் தயவுடன் அறிவிக்கறேன்.	
(ஆ)	**இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின்**				
(i)	நி.பி. 104(4)	-	விபத்து ஏற்பட்ட திகதி முதல் 03 மாதத்தினுள் விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கையை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் இடம்பெற்ற 23 வாகன விபத்துக்கள் தொடர்பாக முழுமையான அறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை.	இறுதி அறிக்கைகளை தயாரித்துக் கொண்டு செல்வதாக அறிவிக்கிறேன்.	நிதிப் பிரமாணம் பிரகாரம் வாகன விபத்து தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	நி.பி.137	576,828	சேவைகள், வேலைகள் அல்லது வழங்கல்களை நிறைவு செய்யும் போது, அது தொடர்பான உரிமையை பொறுப்பேற்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அங்கீகரிக்கும் உத்தியோகத்தராக அங்கீகாரத்தை வழங்கி கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு பொறுப்புக் கூற வேண்டிய போதும், 06 கொடுப்பனவு வவுசர்களிற்காக	கணக்காய்வு அவதானிப்பினால் சுட்டிக்காட்டியுள்ள குறைகளை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிப்பதுடன், இதன் பின்னர் குறைவாடுகளுடன் கொடுப்பனவை செய்யாதிருக்க பொறுப்பேற்குமாறு உரிய பிரிவினை அறிவுறுத்தப்பட்டது.	நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

			அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அனைத்து கொடுப்பனவுகள் தொடர்பாகவும் நிதிப்பிரமாணம் 137 இல் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாக செலவினை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரால் உறுதி செய்ய வேண்டிய போதும், 07 வவுசர்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(iii)	நி.பி. 165(2) (அ) (i)	115,664,500	பதிவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் பெறுவனவுகளின் கணக்கு அளவுகளை உடனடியாக காசோலை, காசுக் கட்டளை தொர்பான பதிவேட்டில் குறிப்பிட்டு உறுதி செய்ய வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், காசு புத்தகம் மற்றும் பற்றுச் சீட்டின் மாதிரி பரீட்சிப்பின் போது 2024 ஜுலை 12 திகதியின் பின்னர் கிடைத்த காசோலைகள் மற்றும் பணம் அந்த காசுப் பதிவேட்டில் பதிந்திருக்காததுடன், அந்த பெறுவனவுகளை கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்ததா என உறுதி செய்து கொள்ள முடியவில்லை.	தற்போது கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .	நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iv)	நி.பி.237 (அ)(i)	4,110,122	ஏதேனும் உடன்படிக்கை பிரகாரம் மேற்கொள்ளும் வேலை அல்லது வழங்களிற்காக	கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் சேவைகள் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்வதில்	நிதிப் பிரமாணம் பிரகாரம் வேலைகளை நிறைவு செய்ததற்கான

			கொடுப்பனவு செய்யும் போது உடனபடிக்கை பிரகாரம் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளதெனும் உறுதிப்பாட்டின் மீது கொடுப்பனவு செய்ய வேண்டிய போதும், 08 சேவைகள் மற்றும் திருத்தங்களிற்காக அந்த பணிகளிற்கு பொறுப்பான உத்தியோகத்தரின் உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளாது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.	ஏற்பட்ட தாமதத் தவறினால் அந்த குறித்த சான்றினை மூல பட்டியலில் குறிப்பிடுதல் தவறவிடப்பட்டுள்ள துடன், எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களை அறிவுருத்துகிறேன.	சான்றிதழ் ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(v)	நி.பி.237 (ஆ)	119,449	பண்டம் கிடைத்துள்ளதாக குறித்த பண்டக பதிவேட்டில் உட்படுத்தியதாக சான்றொன்றை இணைக்க வேண்டிய போதும், 04 பண்டக கொள்வனவு சந்தர்ப்பங்களிற்காக அவ்வாறு செய்திருக்கவில்லை.	கணக்காய்வினால் குறிப்பிட்டுள்ளவாறு பண்டங்கள் கிடைத்து பதிவேட்டில் உட்படுத்தியதாக சான்றினை இணைத்ததுடன், இதன் பின்னர் கணக்காய்வு அவதானிப்பு பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(vi)	நி.பி.1642	-	வாகனங்களிற்கு ஏற்படும் அனைத்து அவசர விபத்துக்கள் தொடர்பாக அண்டிய பொலிஸ் நிலையத்திற்கு அறிக்கையிட வேண்டியுள்ள போதும், மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டுகளிற்குரியதாக இடம்பெற்ற 04 விபத்துக்கள் தொடர்பாக பொலிஸிற்கு அறிக்கையிட்டிருக்கவில்லை.	கணக்காய்வினால் குறிப்பிட்டுள்ள குறித்த விபத்து தொடர்பாக லொக் புத்தகங்களை நாளாதுவரையாக்க வேண்டியுள்ளது.	நிதிப் பிரமாணம் பிரகாரம் விபத்து தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) அரச நிதி சுற்றறிக்கை

(i) 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட 11.1 பிரிவின் பிரகாரம் நி.பி. 756(6)	-	2023 மற்றும் 2024 பண்டக கணிப்பீட்டு பணிகள் தொடர்பாக திணைக்கள சுற்றறிக்கை பிரகாரம் குறித்த பணிகளை உரிய காலத்தினுள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய போதும், அதற்குரிய காலப் பகுதியினுள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கணக்காய்வினால் குறிப்பிட்டுள்ளவாறு குறித்த சுற்றறிக்கை பிரகாரம் செயற்படுமாறு உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவுரை வழங்கினேன்.	அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii) 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட சுற்றறிக்கையின் நி.பி. 371(2) மற்றும் 371(5)	709,115	ஏதேனும் விசேட பணிக்காக பதவிநிலை உத்தியோகத்தரிற்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 உச்சளவு வரையான நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்ட பின்னர் குறித்த பணி முடிவடைந்து 10 நாட்களிற்குள் அந்த உப கட்டுநிதியை தீர்க்க வேண்டிய போதும், திணைக்களத்தினால் 2024 சனவரி 01 முதல் ஜுன் 30 வரை 40 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த உப கட்டுநிதி, 19 நாட்கள் முதல் 04 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தன.	கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் ஏனைய உபகட்டுநிதியை தீர்த்தல் சில நாட்களால் தாமதித்துள்ளதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான தாமதங்கள் இடம் பெறாதவாறு பொறுப்பேற்குமாறு குறித்த உத்தியோகத்தர்கள் அறிவுருத்தப்பட்டனர்.	அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் மற்றும் நிதிப் பிரமாணம் பிரகாரம் முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்..

3.5 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 28,638,265 பெறுமதியுடன் கூடிய ஒப்பந்தங்களுக்கான நிறுத்தி வைத்த தொகை தீர்க்கப்படாது பொது வைப்புக் கணக்கில் காணப்பட்டது.	கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்படும் ஒப்பந்தங்களுக்கான நிறுத்தி வைத்த தொகையை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கிறேன்.	நிறுத்தி வைத்த தொகையை தீர்க்க வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆலோசனை கோவைகளின் எண்ணிக்கை 25,718 ஆக இருந்ததுடன், 2024 ஆண்டினுள் அவற்றின் 7,698 கோவைகளை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் எஞ்சியுள்ள கோவைகள் 18,020 ஆனது. இதன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 வரை 70 சதவீதம் ஆலோசனை கோவைகள் எஞ்சியிருந்தன.	ஆலோசனை கோவைகள் தொடர்பாக 2025.03.24 திகதிய அறிக்கை மூலம் எம்மால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் 2024.01.01 திகதி முதல் 2024.12.31 வரை குற்றவியல் பிரிவு மற்றும் சிறுவர் துஸ்பிரயோக பிரவு எனும் பிரவுகளிற்கு கிடைத்துள்ள ஆலோசனை கோவைகளின் எண்ணிக்கையை அவ்வாண்டினுள்ளே நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது நிலவும் வழக்குகள் /ஆலோசனை கோவைகள் அதிக சதவீதமொன்று கடந்த ஆண்டுகளில் முன்கொண்டு வந்த கோவைகளாவதுடன், அந்த எண்ணிக்கையும் தற்போது இந்த திணைக்களம் முன்வைத்துள்ள மேற்குறித்த அறிக்கையில் உள்ளங்குகின்றன. இதற்கு காரணமாவது இந்த திணைக்களத்தினுள் காணப்படும் சட்ட உத்தியோகத்தர்களின் அதிகளவான பதவி	ஆலோசனை கோவைகளை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		வெற்றிடங்கள் மற்றும் ஆலோசனை கோரும் நிறுவனங்கள் சமர்ப்பிக்கும் கோவைகளில் காணப்படும் முழுமையற்ற தன்மையாகும்.	
(ஆ)	2024 திசெம்பர் 31 திகதி வரை நீதிமன்ற வழக்கு கோவைகளின் எண்ணிக்கை 18,553 ஆனதுடன், 2024 ஆண்டினுள் அவற்றில் 2,957 கோவைகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், 2024 திசெம்பர் 31 திகதி வரை மேலும் எஞ்சியுள்ள கோவைகளின் எண்ணிக்கை 15,596 ஆனது. அதன் பிரகாரம் எஞ்சியுள்ள வழங்கு கோவைகளின் எண்ணிக்கை மொத்த நீதிமன்ற கோவைகளின் 85 சதவீதமாகும்.	சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் வழக்கு கோவைகளை ஆய்வு செய்த பின்னர் உரிய நடவடிக்கை எடுத்த பின்னர் வழங்கு தாக்கல் செய்வதற்காக அறிவுரை வழங்கப்படுவதுடன், அவற்றில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் குற்றச்சாட்டுகளிற்குரிய கோவைகள் வழங்கு முடிவடையும் வரை சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகளை நிறைவு செய்து மூடிவிட இயலாததுடன், அந்த கோவை எண்ணிக்கைகளும் மேற்குறித்த அறிக்கையில் காணப்படுவதாக மேலும் அறிவிக்கிறேன்.	வழக்கு கோவைகளின் பணிகளை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	திறைசேரி செயலாளரின் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 மற்றும் அரச நிதி சுற்றறிக்கை 04 பந்தி பிரகாரம் அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும் தமது நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் கடமைகள் பிரகாரம் எதிர்வரும் ஆண்டில் மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைகள் திட்டத்தை நடைமுறை ஆண்டில் திசெம்பர் 10 திகதிக்கு முன்னர் தயாரித்து	குறித்த பிரிவுகளிலிருந்து தகவல்களை பெற்றுக் கொள்ளும் போது ஏற்பட்ட தவறின் காரணமாக 2024 ஆண்டிற்குரிய வருடாந்த பெறுகைகள் திட்டத்தை சமர்ப்பிப்பது தாமதமானதுடன், எதிர்காலத்தில் அதனை உரிய திகதியில் தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	பெறுகைகள் திட்டத்தினை உரிய திகதியில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு அதன் பிரதிகளை தேசிய பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரச நிதி திணைக்களத்திற்கும் அனுப்ப வேண்டிய போதும், திணைக்களத்தின் பெறுகை திட்டத்தை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு சமர்ப்பித்திருந்ததானது 2024 பெப்ரவரி 06 ஆம் திகதியாகும். அவ்வாறே பெறுகைகள் திட்டத்தின் பிரதிகளை உரிய நிறுவனங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 1998 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையாக தொடர்ந்தும் 25 ஆண்டுகள் ஒரே சுத்திகரிப்பு நிறுவனத்திற்கே ஒப்பந்தத்தை வழங்கியிருந்ததுடன், 2021 நவம்பர் 22 ஆம் திகதி முதல் 2024 திசெம்பர் 10 ஆம் திகதி வரை ஒழுங்கான ஒப்பந்த உடன்படிக்கை இல்லாது குறித்த நிறுவனத்திற்கு ரூபா 39,542,785 ஆன தொகை சுத்தி கரிப்பு சேவைக்காக கொடுப்பவு செய்யப்பட்டிருந்தது	2024 திசெம்பர் வரையான காலத்திற்கு செலுத்துவதற்கு அமைச்சரவை பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது	உரிய நிறுவனத்துடன் ஒப்பந்த உடன்படிக்கை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்
(இ)	பெறுகைகள் கைநூலில் 2.11.3 பிரகாரம் பெறுகைகள் நிறுவனத்தினால் பெறுகைகள் குழுக் கூட்ட அறிக்கைகளை பெறுகைகள் கைநூலில் உள்ளடங்கும் குறித்துரைத்த படிவத்தின் பிரகாரம் அறிக்கையிட வேண்டிய போதும், திணைக்களத்தினால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை	கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்
(ஈ)	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1(ஆ) பிரகாரம் குறைந்த பட்சம் 03 வருட காலத்திற்கான எதிர்ப்பார்த்த பெறுகைகள் நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் பட்டிலிடப்பட்டிருக்க வேண்டிய போதும், திணைக்களம்	03 ஆண்டுகளுக்கான எதிப்பார்த்த பெறுகைகள் திட்டமொன்றை எதிர்வரும் ஆண்டுகளுக்காக தயாரிக்கப்படுமென அறிவிக்கிறேன்.	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	அவ்வாறான திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.		
(உ)	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.3.1(அ) பிரகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட விலை மனுக்கள் 6.3.1(ஆ) பிரகாரம் கேள்வி விலை கோரும் பதிவேடுகளில் அனைத்து கேள்வி விலைகளையும் முத்திரையிடப்பட்ட உரையில் இட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நிபந்தனையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், முத்திரையிடப்பட்ட உரையொன்றின் மூலம் கேள்வி விலை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இதன் பின்னர் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கிறேன்.	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.3.3(ஆ) பிரகாரம் கேள்வி விலைகள் மூடப்பட்டவுடன் கூடிய விரைவில், கேள்வி மனுதாரர் அல்லது வருகை தர விரும்பும் அவர்களது பிரதிநிகள் முன்னால் கேல்வி விலை திறக்கப்பட்டு அவற்றில் கையொப்பமிட வேண்டுமென குறிப்படப்பட்டிருந்த போதும், கேள்வி விலை திறப்பது தொடர்பான அறிக்கை குறிப்புப் படிவத்தில் கேள்வி மனுதாரர் அல்லது அவர்களது பிரதிநிகள் வருகை தந்தற்கான எவ்வித தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்ட்டிருக்கவில்லை.	கேள்வி மணுக்கள் திறக்கும் சந்தர்ப்பதிற்கு விண்ணப்பதாரரினது பிரதிநிதிகள் பங்குபற்றாததுடன், உரிய கேள்வி மனு திறக்கும் குழுவினால் கேள்வி மனுக்கள் திறக்கப்ட்டுள்ளது	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.3.6 பிரகாரம் கேள்வி மனு திறப்பது தொடர்பான தகவல்களை உரிய படிவத்தில் பதிவிட வேண்டிய போதும், சுத்திகரிப்பு சேவை பெறுகைகளிற்குரிய கேள்வி மனு திறக்கும் அறிக்கையில் நிதி ரீதியான தகவல்களின் கீழ் மனு காப்பொன்று காணப்படுவதாக வங்கியின் பெயர் மற்றும் தொகை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், குறித்த நிறுவனம் சமர்ப்பித்திருந்த மனு காப்பு தொடர்பாக எந்தவித குறிப்பும் பதியப்பட்டிருக்கவில்லை.	குறித்த நிறுவனத்தினால் ஏற்றுக்கொண்ட நிதி வங்கியொன்றின் மூலம் மனு பாதுகாப்பொன்றை சமர்ப்பித்திருந்ததுடன், அது கேள்வி மனு திறக்கும் குழுவின் அவதானிப்பிற்கு உட்பட்டிருக்காததுடன், இதன் பின்னர் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஏ)	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.3.6 பிரகாரம் கேள்வி மனு திறப்பது தொடர்பான தகவல்களை உரிய படிவத்தில் பதிவிட வேண்டிய போதும், பெறுமதி ரூபா 6,893,775 ஆன காகிதாதிகள் கொள்வனவு செய்யும் 06 சந்தர்ப்பங்களில் கேள்வி மனு திறக்கும் படிவத்தை பயன்படுத்தி இருக்கவில்லை.	இதன் பின்னர் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கிறேன்.	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஐ)	50 கணனிகள் மற்றும் UPS இயந்திரங்கள் 50 இனை கொள்வனவு செய்வதற்கான மதிப்பீடொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன், 2024 ஆண்டின் பெறுகைகள் திட்டத்திற்கு உள்ளடங்கப்படாத பணியொன்றான ரூபா 14,728,482 பெறுமதியான கணனி உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் 8.7.1 (ஆ) பிரகாரம் கேள்வி மனுவின் செல்லுப்படியாகும் காலத்தினுள் மற்றும் ஒப்பந்தத்தை வழங்குவது தொடர்பான இறுதி முடிவை எடுத்தவுடனே ஏற்புக் கடிதத்தை விநியோகிக்க வேண்டிய போதும், கணனி பெறுகைகளின் போது அவ்வாறான ஆவணமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இதன் பின்னர் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கிறேன்.	குறித்த மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்ட்டிருக்க வேண்டியதுடன், உரிய கொள்வனவு பெறுகைகள் திட்டத்திற்கு இணங்க வேண்டும். மேலும், பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	ரூபா. 252,000 ஆன முற்பணங்களிலிருந்து 35 சதவீதத்திற்கு அதிக அளவொன்றை குறித்த பணிகளிற்கு பெற்றுக் கொள்ளாது மீண்டும் பணமாக தீர்க்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் குறித்த நிமித்த பணிகளிற்கு செலவாகும்ம் தொகையை சரியாக மதிப்பீடு செய்து உப கட்டு நிதிக்காக கோருமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.	தேவைபாட்டின் மீது மாத்திரம் உரிய பணிகளிற்கு முற்பணம் வழங்க வேண்டும்.

(ஆ)	திணைக்களத்தின் பணித் தடைக்கு உள்ளாகியுள்ள மூன்று உத்தியோகத்தர்கள் இடமிருந்து மற்றும் சேவையை விட்டுச்சென்றிருந்த ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 769,860 ஆன தொகை, 10-20 ஆண்டுகளிக்கிடையிலான காலமொன்றாக அறவிடப்படாது நிலவியது.	குறித்த நிலுவை கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அறிவிக்கிறேன்.	கடன் மீதியை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. மனித வள முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 31 திகதிக்கு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1295 ஆன போதும், உண்மையான பதவியணியினர் 690 ஆனதால் 605 உத்தியொகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 47 சதவீதமான அளவானது.	பதவியணியினர் வெற்றிடங்களை பூர்த்தி செய்துகொள்ள தேவையான செயற்பாடுகள் எடுக்கப்படுவதென அறிவிக்கிறேன்.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	திணைக்களத்தின் செயலாற்றுகை மீது நேரடியாக தாக்கம் செலுத்தும் சிரேஷ்ட மட்ட 523 அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் காணப்பட்ட போதும், 2024 திசெம்பர் 31 திகதிக்கு உண்மையான பதவியணியினர் 231 ஆகிவிருந்த காரணத்தால் 292 உத்தியோகத்தர்களினது வெற்றிடங்கள் காணப்பட்டன. அது அங்கீகார பதவியணியினருக்கு ஒப்பாக 56 சதவீத பெருமானம் ஆகும்.	சிரேஷ்ட மட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்புவதற்கு நேர்முக பரீட்சை நடாத்தப்பட்டுள்ளது.	திணைக்களத்தின் செயலாற்றுகை மீது நேரடியாக தாக்கம் செலுத்தப்படுவதால் வெற்றிடங்களை பூர்த்திசெய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2023 நவம்பர் 30 ஆம் திகதிய இலக்கம் 02/2018(1) கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணையில் உள்ளடங்கும் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கான வாழிகாட்டியில் 2.12 பந்தி பிரகாரம் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டத்திற்கான செலவின மதிப்பீட்டை தயாரிக்க வேண்டிய போதும், திணைக்களத்தினால் அவ்வாறான செலவின மதிப்பீடொன்றை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	குறித்த செலவின மதிப்பீட்டை தயாரித்து சமர்ப்பிப்பதாக அறிவிக்கிறேன்.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.